Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, NOVEMBER 18 2024

திங்கட்கிழமை நவம்பர் 18, 2024 | ஒளி: 10 கதிர் 094 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

# பிரத்தியேக வகுப்புகளுக்கு தடை

எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறவிருக்கும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையுடன் தொடர்புடைய விரிவுரைகள், பிரத்தியேக வகுப்புகள், செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகள் உள்ளிட்ட அனைத்து செயற்பாடுகளும் எதிர்வரும் 19ஆம் திகதி நள்ளிரவு முதல் தடை விதிக்கப்பட்டுள்ளதாகப் பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சைகள் திணைக்களம் ஞாயிற்றுக்கிழமை(17) வெளியிட்ட அறிக்கையிலேயே இதனைத் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையுடன் தொடர்புடைய உத்தேச வினாக்கள் அடங்கிய வினாத்தாள்களை அச்சிடுதல், அதனைப் பகிர்ந்தளித்தல் உள்ளிட்ட செயற்பாடுகளுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பரீட்சையுடன் தொடர்புடைய வினாக்களை ஒத்த வினாக்கள் அடங்கிய வினாத்தாள்களைப் பெற்றுத்தருவதாகச் சுவரொட்டிகள், பதாகைகள், துண்டுப்பிரசுரங்களை நேரடியாகவோ அல்லது நிகழ்நிலை ஊடாகவோ விளம்பரப்படுத்துவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தடை செய்யப்பட்ட குறித்த காலப்பகுதியில் அறிவுறுத்தல்களைப் பின்பற்றாதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.



## "புதிய அரசியலமைப்பை நிறைவேற்றியே தீருவோம்"

இலங்கையின் புதிய அரசியலமைப்பை மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நிச்சயம் நிறைவேற்றும் என்று கூறியுள்ள ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா, தேர்தல் விஞ்ஞாபனத்தில் வழங்கப்பட்டுள்ள அனைத்து உறுதிமொழிகளும் நிறைவேற்றப்படும் என்றார். அத்துடன், மூன்றில் இரண்டு பெரும்பான்மையை எவ்வாறு பயன்படுத்துவது என்பதில் கடந்த கால அனுபவத்தின் அடிப்படையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எச்சரிக்கையுடன் இருக்கும் எனவும் அவர் கூறியுள்ளார்.

தொடர்ச்சி P2



புதிய அமைச்சரவை அமைச்சர்கள்

# இன்று நியமனம்

நாட்டின் புதிய அரசாங்கத்தின் புதிய அமைச்சரவை அமைச்சர்கள், இன்று திங்கட்கிழமை (18) முற்பகல் 10.00 மணிக்கு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்யவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

அதன்படி, அனைத்து அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் பதவிப் பிரமாணம் செய்வதற்கான சகல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் அந்த அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தேசிய மக்கள் சக்தியின் (NPP) தேசிய பட்டியல் ஊடாக பாராளுமன்றம் செல்லும் உறுப்பினர்களின் பெயர் பட்டியலை தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

அதன்படி, தேசிய மக்கள் சக்தியினால் தேசியப் பட்டியல் ஆசனங்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட 18 நபர்களின் பெயர்கள் பின்வருமாறு,

* பிமல் நிரோஷன் ரத்னாயக்க
* டொக்டர். அனுர கருணாதிலக்க
* உபாலி பன்னிலகே
* எரங்க உதேஷ் வீரரத்ன
* அருண ஜயசேகர
* டொக்டர்.ஹர்ஷன சூரியப்பெரும
* ஜனித ருவான் கொடித்துவக்கு
* புன்யா ஸ்ரீகுமார ஜயகொடி
* ராமலிங்கம் சந்திரசேகர்
* டொக்டர்.நஜித் இந்திக்க
* சுகத் திலகரட்ன
* லக்மாலி காஞ்சன ஹேமசந்ர
* சுனில் குமார கமகே
* காமினி ரத்னாயக்க
* பேராசிரியர். ருவன் சமிந்த ரனசிங்க
* சுகத் வசந்த டி சில்வா
* அபுபகர் அதம்பாவா
* ரத்னாயக்க ஹெட்டிகே உபாலி சமரசிங்க



## IMF இன் மூன்றாவது குழு இலங்கைக்கு விஜயம்

இலங்கைக்கான சிரேஷ்ட தூதுவர் பீட்டர் ப்ரூயர் தலைமையிலான சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) குழுவொன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை (17) கொழும்பிற்கு விஜயம் செய்துள்ளது.

IMF இன் விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழான இலங்கையின் பொருளாதார சீர்திருத்தத் திட்டத்தின் மூன்றாவது மதிப்பாய்வை இக்குழு நடாத்தவுள்ளதாக, IMF பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதையும் நாடு எதிர்நோக்கும் நிதி சவால்களை எதிர்கொள்வதையும் இலக்காகக் கொண்ட சீர்திருத்தங்களின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதில் இந்த மீளாய்வு ஒரு முக்கியமான படியாகும்.

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதித் திட்டம் இலங்கையின் பொருளாதார மீட்பு முயற்சிகளை எளிதாக்குவதற்கு தேவையான நிதி உதவி மற்றும் கொள்கை வழிகாட்டல்களை வழங்குகிறது



## "அனுபவம் தேவையில்லை"

இதற்கு முன்னர் எந்த அரசாங்கத்திற்கும் கிடைக்காத அதிகாரத்தைத் தேசிய மக்கள் சக்தி பெற்றிருந்தாலும், வரம்பற்ற அதிகாரம் வரம்பற்ற ஊழல் என்பதை நினைவில் கொள்ள வேண்டும் என முன்னாள் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## எம்.பியாகிறார் திலித் ஜயவீர




சர்வஜன அதிகாரம் கட்சிக்குக் கிடைக்கப்பெற்ற தேசியப் பட்டியல் உறுப்பினர் பதவிக்குக் கட்சியின் தலைவர் தொழிலதிபர் திலித் ஜயவீரவை நியமிக்க சர்வஜன அதிகார உயர் பீட குழு தீர்மானித்துள்ளதுடன், அது தொடர்பான தீர்மானத்தைத் தேர்தல் ஆணைக்குழுவிற்கு ஞாயிற்றுக்கிழமை அறிவித்துள்ளது.

## "ஓய்வு பெற போவதில்லை"

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு கிடைக்கும் என தாங்கள் எதிர்பார்த்த வாக்குகள் சரியாகக் கிடைத்துள்ளதாக அக்கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சனிக்கிழமை (16) ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.



மேலும், தேசிய மக்கள் சக்தியின் வெற்றி ஒரு நேர்மறையான முன்னேற்றம் என்று கூறியதுடன், புதியவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்றார்.

தொடர்ச்சி P2




பாராளுமன்றத்தில்

## 21 பெண் பிரதிநிதிகள்

நாட்டின் நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில், 21 பெண் பிரதிநிதிகள் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 19 பேர் தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் ஆவர்.

இதற்மைய அவர்களில் ஆகக் கூடுதலாக பிரதமர் ஹரிணி அமரசூரிய கொழும்பு மாவட்டத்தில் இருந்து 655,289 வாக்குகளை பெற்றுத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சட்டத்தரணி கௌசல்யா ஆரியரத்ன 80,814 வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றதுடன்,

தொடர்ச்சி P2



## குற்ற பத்திரிகையை வாங்க மறுத்த சுமந்திரன்

க.அகரன்

வவுனியாவில் தமிழரசுக் கட்சியின் செயலாளர் ப.சத்தியலிங்கம் மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்ற பத்திரிகையின் பிரதியை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவமோகன் வழங்க முற்பட்ட போது, அதனைச் சுமந்திரன் வாங்க மறுத்தார்.

தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டம் வவுனியா-ஈரற்பெரியகுளத்தில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் தற்போது இடம்பெற்று வருகின்றது.

இதன்போது, கட்சியின் செயலாளரின் பொறுப்பற்ற தான்தோன்றித்தனமான செயற்பாடுகளால் கட்சியின் கூட்டுப்பொறுப்பு உருக்குலைக்கப்பட்டதாகவும் அதனை விசாரணை செய்யுமாறு கோரி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகனால் கட்சியின் பதில் செயலாளருக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை ஒன்று தாக்கல் செய்யப்பட்டது.

தொடர்ச்சி P2



பணியிடங்களுக்கு திரும்பும்

## மக்களுக்கு சிறப்பு ரயில் சேவை

பொதுத் தேர்தல் கடமைகளுக்காக நீண்ட வார விடுமுறை முடித்து விட்டு தங்களது பணியிடங்களுக்கு திரும்பும் பயணிகளுக்காக சிறப்பு ரயில்களை இயக்கத் ரயில்வே திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

வழக்கமான ரயில் சேவைக்கு மேலதிகமாக ஞாயிற்றுக்கிழமை (17) திங்கட்கிழமை (18) சிறப்பு ரயில்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, 7 சிறப்பு ரயில் சேவைகள் திட்டமிடப்பட்டுள்ளன.

கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை வரையிலும், பதுளையிலிருந்து கொழும்பு கோட்டை வரையிலும், கண்டியில் இருந்து கொழும்பு கோட்டை வரையிலும், பெலியத்தவிலிருந்து கொழும்பு கோட்டை வரையிலும் விசேட ரயில் சேவைகள் இயங்குகின்றன.

அத்துடன், கொழும்பு கோட்டையிலிருந்து ஹிக்கடுவை வரையிலும், மாத்தறையில் இருந்து கொழும்பு கோட்டை வரையிலும், காலியில் இருந்து கொழும்பு கோட்டை வரையிலும் விசேட ரயில் சேவைகள் இடம்பெறவுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

PAGE 1 தொடர்ச்சிகள்

# நிறைவேற்றியே தீருவோம்”

ஜனாதிபதித் தேர்தலின் போது, அனுரகுமார திசாநாயக்கவினால் முன்வைக்கப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் புதிய அரசியலமைப்பு, ஜனநாயகத்தை வலுப்படுத்துதல், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழித்தல் உள்ளிட்ட வாக்குறுதிகள் வழங்கப்பட்டதுடன், அவை அனைத்தும் நிச்சயமாக நிறைவேற்றப்படும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இந்த விடயங்கள் குறித்து ஊடகங்களுக்கா கருத்து வெளியிட்ட டில்வின் சில்வா, புதிய அரசியலமைப்பைத் தயாரிப்பது சவாலான பணியாகும். எனினும் அதனை வெற்றிகரமாகச் செய்து முடிப்போம். நாட்டின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு புதிய அரசியலமைப்பைப் பாராளுமன்றத்தில் முன்வைத்து, சர்வஜன வாக்கெடுப்பின் ஊடாக நிறைவேற்றுவோம்.

1972 மற்றும் 1978 அரசியலமைப்புகளில் அமைச்சர்களின் தன்னிச்சையான அதிகாரங்கள் விரிவுபடுத்தப்பட்டுள்ளதுடன், 1978ஆம் ஆண்டு இலங்கையில் நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்பில் ஜனாதிபதி மற்றும் அரச இயந்திரத்தின் தன்னிச்சையான அதிகாரங்களை அதிகரித்ததன் மூலம் நேர்மறையான விடயங்களே நாட்டில் இடம்பெற்றுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# “அனுபவம் தேவையில்லை”

ஆனால், தற்போதைய அரசாங்கம் அந்த நிலைமைக்கு வராது என்பதே மக்களின் நம்பிக்கை என குறிப்பிட்டுள்ள அவர், அந்த அதிகாரத்தைக் கவனமாகப் பயன்படுத்துவதாக ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் கூறியுள்ளமை பாராட்டத்தக்கது என்று கூறியுள்ளார்.

தற்போதைய பாராளுமன்றத்துக்குத் தெரிவான பெரும்பான்மையானவர்களுக்கு அனுபவம் இல்லையென்றாலும், திருமணத்திற்கு முன்னதாக யாரும் சென்று அனுபவம் பெறுவதில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

புதிய பாராளுமன்ற உறுப்பினர்கள் பழையவற்றின் நல்ல விடயங்களை உள்வாங்கி, தங்கள் கட்சியின் அனுபவமிக்க உறுப்பினர்களால் வழிகாட்டப்பட்டு, பொதுச் சேவையில் தங்களை அர்ப்பணிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றின் போது இதனைக் கூறிய அவர், அங்கு உரையாற்றுகையில், “தேர்தலில் வெற்றிபெறுவோர் வெற்றியைக் கொண்டாடுவதானது தோல்வியடைந்த கட்சிகளின் காயத்தில் உப்பைக் கொட்டுவதைப் போன்றதாகும். அந்தவகையில் இம்முறை வெற்றியடைந்த கட்சி வெற்றியைக் கொண்டாடாமல் இருப்பது வரவேற்கக் கூடிய விடயமாகும். எனது காலத்தில் இவ்வாறானதொரு வரலாற்று வெற்றியை ஒரு கட்சி பெற்றுள்ளமை இதுவே முதன்முறையாகும். 1970இல் பாராளுமன்றத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை வழங்கப்பட்டது. 1977இல் ஆறில் ஐந்து பெரும்பான்மை வழங்கப்பட்டது. அதன் பின்னர் எந்தவொரு தனிக் கட்சியாலும் இவ்வாறானதொரு வெற்றியைப் பெற முடியவில்லை.

தேசிய மக்கள் சக்தியானது தான் பெற்றுள்ள அதியுயர் அதிகாரத்தை துஷ்பிரயோகப்படுத்தும் என்று மக்கள் நம்பவில்லை. எனவே, இந்த பாராளுமன்றம் முழு இலங்கையர்களினதும் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகச் செயற்பட வேண்டும்.

பெரும்பாலானவர்கள் வாக்களிப்பைப் புறக்கணித்தமைக்கு அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளே பொறுப்புக் கூற வேண்டும். தோல்வியடைந்தாலும் மக்களுக்காகச் சேவையாற்ற வேண்டும் என்பதை இது உணர்த்துகின்றது. எனவே யாரும் யார் மீதும் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கக் கூடாது.

1977ஆம் ஆண்டிலும் பெரும்பான்மையாகப் புதுமுகங்களாகவே பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டனர். எனவே, இங்கு அனுபவம் என்பது பெரிய விடயமல்ல” என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# “ஓய்வு பெற போவதில்லை”

முன்னைய பொதுத் தேர்தலில் 3% வாக்குகளைப் பெற்ற தேசிய மக்கள் சக்தியின் வாக்கு வங்கி இம்முறை 61% என்ற அளவுக்கு ஆக கணிசமான அளவு உயர்ந்தது குறித்து கருத்து வெளியிட்டுள்ள மகிந்த ராஜபக்ஷ இந்த நாட்டு மக்களே வாக்களித்தார்கள், வெளியாட்கள் அல்ல. பொது ஆணையை நாம் மதிக்க வேண்டும்” என்று கூறியுள்ளார்.

இதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை ஒருபோதும் கைவிடப் போவதில்லை என்றும், அரசியலில் இருந்து ஓய்வு பெறப்போவதில்லை என்றும் கூறிய அவர், எந்த அரசியல்வாதி அரசியலில் இருந்து ஓய்வு பெறுகிறார்? என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும், கட்சியின் எதிர்கால அரசியல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் தற்போது எந்த கலந்துரையாடலும் இடம்பெறவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், அண்மை தேர்தல்களில் ரணில் விக்ரமசிங்கவுக்கு என்ன நடந்தது என்பது குறித்து ஊடகவியலாளர்கள் கேட்டபோது, நான் அவருக்காக மிகவும் வருந்துகிறேன், அவ்வளவுதான் என்று மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

# 21 பெண் பிரதிநிதிகள்

கொழும்பில் சமன்மலி குணசிங்க 59,657 விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளார்.

களுத்துறை மாவட்டத்தில் இருந்து சட்டத்தரணி நிலாந்தி கோட்டஹச்சி 131,375 வாக்குகளையும், ஒஷானி உமங்க 69,932 வாக்குகளையும் பெற்றுள்ளனர்.

ஹேமலி சுஜீவா 66,737 வாக்குகளைப் பெற்று ஒரு ஆசனத்தை பெற்றதோடு, ஸ்டெபானி பெர்னாண்டோ 57,637 வாக்குகளைப் பெற்றுள்ளார்.

கேகாலையில், சாகரிகா அத்தவுட 59,019 வாக்குகளையும், இரத்தினபுரியில் நிலுஷா லக்மாலி 48,791 வாக்குகளையும் பெற்றுள்ளனர்.

கண்டி மாவட்டத்தில், துஷாரி ஜயசிங்க 58,223 வாக்குகளை பெற்றுள்ளார்.

நுவரெலியாவில், அனுஷ்கா தர்ஷனி 34,035 வாக்குகள் பெற்று தனது ஆசனத்தைப் பெற்றுள்ளார்.

# குற்ற பத்திரிகையை வாங்கமாறுத்த சுமந்திரன்



குறித்த குற்றப்பத்திரிகையின் பிரதியை இன்றைய கூட்டத்திற்கு வருகைதந்த அனைவருக்கும் சிவமோகன் வழங்கியிருந்தார்.

இந்நிலையில், சுமந்திரனுக்கும் அதனை வழங்க முற்பட்டபோது, அவர் அதனைப் பெற்றுக்கொள்ள மறுத்து விட்டுச் சென்றார்.

குறித்த குற்றப் பத்திரிகையில்.. கட்சி மாநாட்டுக்கு முன்னர் ஆலோசனைக் கூட்டம் நடாத்தாமை, சுகயீனம் என கூறி பொதுக் குழு கூட்டத்திற்கு வராமை, யாப்பிற்கு முரனாகத் தேர்தல் நியமனக் குழுவை நியமித்தமை, கட்சி உருக்குலையக் காரணமாக இருந்தமை, முல்லைத்தீவு மாவட்டக் குழுவின் ஆலோசனை இன்றி, தேர்தல் நியமனங்களை வழங்கியமை போன்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இது தொடர்பாகக் கருத்து தெரிவித்த சிவமோகன்,

தோற்றவர்கள் பாராளுமன்றத் தேர்தல் கேட்கக் கூடாது என்று சொன்னவர் யார். அப்படி ஒரு முடிவு கட்சி எடுக்கவில்லை. கட்சி எடுக்காத முடிவைக் கட்சியின் பேச்சாளர் என்ற போர்வையில் உட்புகுத்தக் கூடாது.

முஸ்லிம்களைப் புலிகள் இனச் சுத்திகரிப்பு செய்தார்கள் என்ற அவரது கருத்து தமிழரசுக் கட்சிக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது. அது கட்சி எடுத்த முடிவா இல்லையே. போரை நீங்கள் ஏற்கவில்லை. நீங்கள் கொழும்பில் இருந்தீர்கள், நாங்கள் இந்த மண்ணில் இருந்தோம். அதை ஏற்பதா? இல்லையா? என்று நாங்களே தீர்மானிக்க வேண்டும். அதை நீங்கள் சொல்லத்தேவையில்லை.

தோற்றவர்கள் கேட்கக் கூடாது என்று கூறிவிட்டு தேசிய பட்டியல் கொடுப்பதற்கு இனி இங்குப் போராட்டம் நடக்கும். நான் எடுக்கமாட்டேன் என்று சொல்லி அவரும். நீங்கள் எங்கோ என்று எங்கள் ஆட்கள் சொல்லி சில நேரம் கொடுக்கப்படலாம். அது பிழை. படுதோல்வியடைந்த சுமந்திரன் மற்றும் தமிழரசுக் கட்சியை உருக்குலைத்த சத்தியலிங்கம் ஆகியோர் தாங்களாகவே பதவிகளில் இருந்து விலகிக்கொள்ள வேண்டும்.

தேசிய பட்டியல் ஆசனத்தை வன்னிக்குக் கொடுக்க வேண்டும் என்றால், அது இரண்டாவது விருப்பு வாக்கை எடுத்தவருக்கே கொடுக்க வேண்டும் என்றார்.

# புது முகங்களுக்கு பயிற்சி

நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலின் ஊடாக 10ஆவது பாராளுமன்றத்துக்குத் தெரிவான புதிய உறுப்பினர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் ஞாயிற்றுக்கிழமை (17) முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இந்நிகழ்வு எதிர்வரும் 20ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

குறித்த நாட்களில் பாராளுமன்ற வளாகத்துக்கு வருகைதந்து அல்லது, இணையவழியில் புதிய பாராளுமன்ற உறுப்பினர்கள் தம்மைப் பதிவு செய்துகொள்ள முடியும் என பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்துள்ளார்.

இதேவேளை, புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்குப் பாராளுமன்ற மரபு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் தொடர்பில் 03 நாள் செயலமர்வு ஒன்றை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதன்படி, எதிர்வரும் 25, 26, 27 ஆகிய திகதிகளில் இந்த செயலமர்வு நடக்கவுள்ளதுடன், இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் சனிக்கிழமை (16) வெளியிடப்பட்டுள்ளது.

# நடுக்கடலில் ஐவர் கைது

இலங்கைக்கு மேற்கே 110 கடல் மைல் தொலைவில் போதைப்பொருள் கடத்திய இலங்கையின் பல நாள் கப்பலுடன் 5 சந்தேகநபர்கள் ஞாயிற்றுக்கிழமை(17) கைது செய்யப்பட்டதாகக் கடற்படை ஊடகப் பேச்சாளர் கயான் விக்ரமசூரிய தெரிவித்துள்ளார்.

கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட பல நாள் கப்பலில் சுமார் 40 கிலோ போதைப்பொருள் இருந்ததாக சந்தேகிக்கின்றனர்.

இந்த சந்தேக நபர்களுக்கு இலங்கைக்கு மேற்காக இருந்து வந்த மற்றுமொரு கப்பல் மூலம் போதைப்பொருள் வழங்கப்பட்டிருக்கலாம் என கடற்படையினர் சந்தேகிக்கின்றனர்.

கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் மற்றும் சந்தேக நபர்கள் காலி துறைமுகத்திற்குக் கொண்டு வரப்படவுள்ளதாகக் கடற்படை பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சந்தேகநபர்கள் மற்றும் போதைப்பொருட்கள் காணிக்கு கொண்டு வரப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காகப் போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளன.

# “தீர்க்கப்படாத பிரச்சினைகளை அனுர அரசாங்கம் தீர்க்கும்”



இலங்கை பாராளுமன்ற வரலாற்றில் முதன்முறையாக பார்வையற்ற சமூகத்தினருக்கான தேசிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியலில் இருந்து சுகத் வசந்த டி சில்வாவுக்கு பாராளுமன்ற உறுப்பினர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

நாட்டில் நடந்து முடிந்த தேர்தல்களில் அனுரகுமார திசாநாயக்கவுக்கும் தேசிய மக்கள் சக்திக்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்திருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இந்த நாட்டிலே தீர்க்கப்படாத பிரச்சினைகளைத் தீர்ப்பார்கள் என நாம் நம்புகின்றோம் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அருண்மொழிவர்மன் தம்பிமுத்து தெரிவித்துள்ளார்.

தமிழர் விடுதலை கூட்டணியின் தலைவர் அருண்மொழிவர்மன் தம்பிமுத்துவின் ஊடக சந்திப்பு ஞாயிற்றுக்கிழமை (17) மட்டக்களப்பில் உள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போது அவர் இக்கருத்தினை தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இலங்கையில் நடந்து முடிந்த பாராளுமன்ற பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியை ஆதரித்து வாக்களித்த அனைத்து மக்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தற்போது இலங்கையில் நாடாளுமன்றத்தில் புதிய அரசாங்கம் பதவியேற்க இருக்கிறது. அனுரகுமார திசாநாயக்க அவர்களுக்கும் அவரது தேசிய மக்கள் சக்திக்கும் மூன்றில் இரண்டு ஆசனங்கள் கிடைக்கப்பெற்றிருக்கிறது.


இந்த சந்தர்ப்பத்தை அவர்கள் முழுமையாகப் பாவித்து இந்த நாட்டிலே தீர்க்கப்படாத பல விடயங்களைத் தீர்ப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது. அதை அவர்கள் கையில் எடுக்க வேண்டும் என்ற விடயத்தையும் நான் அவர்களுக்கு வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் எமது ஆதரவாளர்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியானது 20 வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் புத்தெழுச்சி பெற வேண்டும் என்று கடுமையாக உழைத்துக்கொண்டு இருக்கிறார்கள். எமது கட்சியின் ஆதரவாளர்களுக்கும் நான் கூற விரும்பும் விடயம் என்னவென்றால், எமது செயற்பாடு தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் தமிழர் விடுதலை கூட்டணியானது தற்போது ஏற்பட்டிருக்கின்ற இந்த நிலையிலிருந்து முழுமையாகப் புத்தெழுச்சி பெறும் என்ற முழுமையான நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதற்கான வேலைத்திட்டங்களில் நான் முன்னெடுத்துச் செல்ல இருக்கின்றேன்.


எமது ஆதரவாளர்களுக்கு நான் கூறியிருக்கிறேன். மட்டக்களப்பிலே மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும். மட்டக்களப்பில் ஒரு புதிய அரசியலை முன்னெடுக்க வேண்டும் என்று கூறி இருக்கின்றேன். அதன் அடிப்படையில் நாங்கள் செயற்பாடுகளையும் முன்னெடுக்கவிருக்கிறோம்.

இன்று மட்டக்களப்பில் மக்களால் தேர்வு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்குப் பல கடமைகள் இருக்கின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் தீர்க்கப்படாத பல பிரச்சினைகள் இருக்கின்றன. நிச்சயமாக எமக்கான நிலப் பிரச்சினை இருக்கிறது. இன்னும் சொல்ல வேண்டுமென்றால், மேய்ச்சல் தரை பிரச்சினை இருக்கிறது. வளங்கள் சூறையாடப்படும் நிலைமை காணப்பட்டு வந்திருக்கிறது.

இதற்கெல்லாம் எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் குரல் கொடுக்க வேண்டும். நானும் ஒரு நிழல் பாராளுமன்ற உறுப்பினராக இந்த மாவட்டத்திலே தொடர்ச்சியாக எனது நிலைப்பாட்டை, பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வேன் என்றும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன் என்றார்.



# ஐயப்பன் புகழ்பாடும் ஆனந்த ஐயப்பன் தேவஸ்தானம்



இலங்கையின் கொழும்பு மாநகரில் அளுத்மாவத்தை வீதியில் அமைந்துள்ள ஆனந்த ஐயப்பன் திருக்கோவில் இலங்கையில் மிகவும் புகழ்பெற்ற ஆலயமாகும். கார்த்திகை மாதம் முதலாம் திகதி மாலை அணிந்து, இங்கு இருமுடி கட்டி படியேறும் பக்தர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

கேரள மாநிலம் சபரிமலை திருக்கோவில் போன்று 18 படியுடன் அமைக்கப்பட்டுள்ள இந்த ஆலயம், கடந்த 24 ஆண்டுகளாக மேல சாந்தி நம்பூதிரிகளால் மிகவும் சிறப்பான வழிபாட்டுத் தளமாக இலங்கை வாழ் பக்தர்களின் முக்கியமான ஆலயமாக அமைந்துள்ளது.

கார்த்திகை மாதம் விரதமிருந்து வரும் அடியார்களுக்கு அருள் பாவித்து சாஸ்தாவின் புகழ்பாடும் ஒரு ஆலயமாக அமைந்துள்ளது.

சபரிமலையில் நடக்கும் தின பூசைகள் போல் மேல் சாந்தியால் பூஜைகள் நடத்தப்பட்டு அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகின்றது. சனிக்கிழமை நாட்களில் மிக விமர்சையாக மாலை அலங்காரத்துடன் நடைபெறும், படிபூஜை பார்க்க மிகவும் கண்கொள்ளக் காட்சியாகும்.

2019 கொரோனாவை தொடர்ந்து ஆண்டு தோறும் பக்தர்களின் எண்ணிக்கை, மாலை அணிந்து விரதம் இருந்து சபரிமலை செல்ல முடியாத பக்தர்கள், அளுத்மாவத்தை ஆலயத்தில் படியேறும் வாய்ப்பு வசதிகளை ஆலயத்தின் அறங்காவலர் ராஜு சிவ ராமன் தலைமையில் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

பிரம்மஸ்ரீ கண்டரு மகேஸ்வரு சபரிமலை தலைமை அதியுயர் தந்திரி, அவர்களின் ஆன்மீக கிரியைகள் உடன், இப்புனித திருத்தலத்திற்குத் தென்னிந்தியப் பாடகர் பத்மஸ்ரீ Dr. K.J.ஜேசுதாஸ், அமரர்களான பெரி.முத்துசாமி, குருநாதர் கனகரட்ணம் ரவீந்திரகுமார் மற்றும் அறங்காவலர் ராஜு சிவராமன், நிர்வாகசபை உறுப்பினர்களின் பெரும் முயற்சியால் 05-04-1993 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது

அதைத் தொடர்ந்து, கட்டிடக்கலை நிபுணர் ராஜு சிவராமனின் அவர்களின் தலைமை முகாமைத்துவத்தின் கீழ், ஸ்தபதி சந்தனகுமாரின் சிற்பக்கலையில் கோவில் நிர்மாணிக்கப்பட்டு, 15-07-2002இல் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. கும்பாபிஷேக கிரியா பூஜைகள் யாவும் சபரிமலை அதியுயர் தந்திரி பிரம்ம ஸ்ரீ கண்டரு மகேஸ்வரு அவர்களின் தலைமையின் கீழ், மேல் சாந்திரிகளாலும் தந்திரிக முறைப்படி, கேரள செண்டை பஞ்சவாத்தியம் முழங்க பூஜைகள் யாவும் நடைபெற்று ஐயன், ஆனந்த ஐயப்பனாக பிரதிஷ்டை செய்யப்பட்டு திருவருள் பாலித்தது. அதைத் தொடர்ந்து, ஒவ்வொரு வருடமும் ஆனிமாதம் வருஷாபிஷேக கொடியேற்றத் தீர்த்த ஆராட்டு திருவிழா நடைபெற்று வருகிறது. இந்நிகழ்வுகள் யாவும் சபரிமலை தலைமை தந்திரியின் தலைமையின் கீழ், ஆலய மேல் சாந்திகளால் சத்தியமான பொன்னு 18ஆம் படி பூஜை மற்றும் அனைத்து பூஜைகளும் கேரள செண்டை பஞ்சவாத்தியத்துடன் நடைபெற்று வருகிறது.

2011 ஆண்டில் ஆலயத்தின் கொடிஸ்த்தம்பம் புதிதாகப் புனரமைக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது. இது முன்னர் இருந்ததைவிட 39 அடி உயரமாக புனர் நிர்மாணம் செய்யப்பட்டது. அத்தோடு, சத்தியமான பொன்னு 18ஆம் படியும் புனர் நிர்மாணிக்கப்பட்டது.

இந்த ஆலயம் அமைவதற்கு அறங்காவலர் ராஜு சிவராமனுக்கு பக்கத்துணையாக இருந்து இன்னும் செயல்பட்டுவரும் தற்போதைய முக்கியமான நிர்வாக சபை உறுப்பினர்களான க.கணேஷமூர்த்தி, வி.மனோரஞ்சன், சி.ஆனந்தீஷ்வரன், அ.ரமேஷ், சி.தியாகராஜ், அருணாச்சலம் பால்ராஜ் ஆகியோர் தோன்றா துணையாக நின்று திருப்பணிகளை செய்து வருகின்றனர்.

ஆலயத்தில் ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமை ஐயப்ப சுவாமியின் காவல் தெய்வங்களான கருப்பு சுவாமி, கடுத்த சுவாமிக்கு விசேட திரவிய அபிஷேக அலங்கார பூஜை நடைபெறுகிறது. இது அவரை குல தெய்வமாக வழிபடுவோருக்கு மிக முக்கியமான பூஜையாக இருக்கிறது.

அதுபோல், நாகராஜ பிரபுவுக்கு அவருடைய ஜென்ம நட்சத்திரமாகிய ஆயிலிய நட்சத்திரத்தில் விசேட பூஜை ஒவ்வொரு மாதமும் நடைபெறுகிறது. இது நாகதோஷம், திருமண தடங்கல், மாங்கல்ய தோஷம், தீராத நோய்கள் உள்ளவர்களுக்கு நிவர்த்தி கிடைத்திருக்கிறது.

கார்த்திகை மாதம் முதலாம் திகதி ஐயப்ப சுவாமிக்கு விரதம் இருக்கும் சாமிமார்களுக்கு மாலை அணிவிக்கப்படும். அதைத் தொடர்ந்து, 60 நாட்கள் விசேட பூஜைகள், பஜனை நடைபெற்று அன்னதானம் வழங்கப்படுவதை மண்டல பூஜை என்பார்கள். இருமுடி கட்டி, நெய் அபிஷேகம் செய்வதற்கு ஐயப்ப விரத மாலை அணிந்த சுவாமிமார்களுக்கு சத்தியமான பொன்னு 18ஆம் படி ஏறுவதற்கு மண்டல பூஜை அன்றும், (கார்த்திகை முதல் திகதியிலிருந்து 41ஆம் நாள்) ஜனவரி முதலாம் திகதியும் ஜனவரி 14ஆம் திகதியும் (மகரஜோதி) வாய்ப்பு அளிக்கப்படும். சபரிமலைக்குப் போக முடியாத ஐயப்ப விரத மாலை அணிந்த சாமிமார்கள் இங்குச் சத்தியமான பொன்னு 18ஆம் படி ஏறி நெய் அபிஷேகம் செய்து விரதத்தைப் பூர்த்தி செய்கிறார்கள். இது இலங்கை வாழ் ஐயப்ப சுவாமி பக்தர்களுக்குக் கிடைத்திருக்கும் பெரிய வரப்பிரசாதமாகும்.

அதைத் தவிர, ஆவணி திருவோணம், சித்திரை விசு நாட்களிலும் ஐயப்ப விரத மாலை அணிந்து பக்தர்கள் சபரிமலை செல்கிறார்கள். வசதி இல்லாதவர்கள் இங்கு இருமுடி கட்டி சத்தியமான பொன்னு 18ஆம் படி ஏறி நெய் அபிஷேகம் செய்து விரத பூர்த்தி செய்து கொள்கிறார்கள்.

தினமும் காலையில் விநாயகருக்குக் கணபதி ஹோமம், அதனைத் தொடர்ந்து ஆனந்த ஐயப்ப சுவாமிக்குப் பஞ்ச திரவிய அபிஷேகம் நடைபெறுகிறது. இதை உபயமாக மெய்யடியார்கள் செய்து வருகிறார்கள். பூஜைகள் யாவும் கேரள ஆலய மேல் சாந்திகளால் தந்திரிக முறைப்படி நடைபெற்றுவருகின்றன.



# “பெண்கள் தலைமைத்துவம் உயர்வதை பார்க்க முடியும்”

அரசியலில் தான் எடுத்துள்ள முதல் அடியின் மூலம், பாராளுமன்றத்திலும் அதற்கு அப்பாலும் அதிகமான பெண்கள் தலைமைப் பதவிகளுக்கு உயர்வதை சந்தேகத்திற்கு இடமின்றி பார்க்க முடியும் என்று பாராளுமன்றத்திற்கு புதிதாக தெரிவு செய்யப்பட்ட பெண் பிரதிநிதியான அம்பிகா சாமுவேல் தெரிவித்துள்ளார்.

அத்துடக், பெருந்தோட்ட சமூகம் மற்றும் அதற்கு அப்பால் உள்ள இளைஞர்கள் அரசியலில் தீவிர பங்கு வகிக்கும் திறன் குறித்தும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

மேலும் அவர் கூறியுள்ளதாவது,

தமது அரசியல் பிரவேசம், வெறும் தனிப்பட்ட சாதனையல்ல, குறிப்பாக மற்றவர்களுக்கு ஒரு படிக்கலாகும்.

நான் முதன்முறையாக அரசியலுக்கு வருவதால், எனது சகோதரிகள், சகோதரர்கள் கண்டிப்பாக அரசியலுக்கு வருவார்கள். அவர்கள் நல்ல திறன்களைக் கொண்ட பிள்ளைகள்.

ஜனரஞ்சகவாதிகள் மற்றும் நாட்டிற்கு சேவை செய்ய ஆர்வமுள்ளவர்கள். அவர்கள் சிக்கிக்கொண்டிருந்தனர், அவர்கள் ஒருவித கட்டமைப்பிற்குள் சிக்கி இருந்தனர்.

அந்த கட்டமைப்பு உடைத்தெறியப்பட்டுள்ளது. இனிமேல் சில நல்ல தலைவர்கள் மலையகம் மற்றும் பிற மாவட்டங்களில் இருந்து வருவார்கள்

மேலும், பெண்கள் பெரும்பாலும் சமையலறையில் மட்டுப்படுத்தப்பட்டனர், ஆனால் அவர்களில் பலர் அதிக திறன் கொண்டவர்கள். அவர்கள் பெரும் ஆற்றலைக் கொண்டுள்ளனர்.

இந்தநிலையில், அரசியலில் தாம் எடுத்துள்ள முதல் அடியின் மூலம், நாடாளுமன்றத்திலும் அதற்கு அப்பாலும் அதிகமான பெண்கள் தலைமைப் பதவிகளுக்கு உயர்வதை சந்தேகத்திற்கு இடமின்றி பார்க்க முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

## முச்சக்கரவண்டி விபத்து; ஒருவர் பலி

அஹுங்கல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊரகஸ்மன்ஹந்திய வீதியின் கடுவில அணைக்கட்டு பகுதியில் சனிக்கிழமை (16) மோட்டார் சைக்கிள் ஒன்று முச்சக்கரவண்டியுடன் மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ரந்தொடுவில-அத்தன்தொடுவ பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அஹுங்கல்லயிலிருந்து உரகஸ்மன்ஹந்திய நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் எதிரே-வந்த முச்சக்கரவண்டியுடன் நேருக்கு நேர் மோதி வீதியை-விட்டு விலகி விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் பலத்த காயங்களுக்கு உள்ளாகி பலப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

சடலம் பலப்பிட்டிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பில் சந்தேகத்தின் பேரில் முச்சக்கரவண்டி சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் அஹுங்கல்ல பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

## ஐயப்ப பக்தர்கள் மாலை அணிந்தனர்

செ.திவாகரன்

கார்த்திகை மாதம் முதல் ஐயப்ப பக்தர்கள் மாலை அணிவித்து ஒரு மண்டலம் விரதம் இருந்து சபரிமலை செல்வது வழக்கம் இதன் படி நானுஓயா - கிளரண்டன் தோட்டத்தில் ஐயப்பன் ஆலயத்தில் கார்த்திகை மாதம் முதல் நாளான சனிக்கிழமை (16) அன்று நீண்ட வரிசையில் நின்று ஐயப்ப பக்தர்கள் மாலை அணிந்தனர்.









## வேட்பாளரின் வீடு மீது தாக்குதல்

எம்.எப்.றிபாஸ்



திகாமடுல்ல மாவட்டத்தில் சுயேச்சை குழு ஒன்றில் போட்டியிட்ட வேட்பாளர் எம்.ஏ.எம்.இத்ரீஸின் வீட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்றில் அமைந்துள்ள இவரது வீட்டின் மீது கடந்த செவ்வாய்க்கிழமை (12) இரவு இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் அக்கரைப்பற்று பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

சம்பவ தினம் அவர் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த போதே இனம் தெரியாத நபர்கள் அத்துமீறி நுழைந்து வீட்டின் ஜன்னல் கண்ணாடிகளை உடைத்துள்ளதுடன் ஏனைய பொருட்களுக்கும் சேதம் விளைவித்துள்ளனர்.

அக்கரைப்பற்று பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிணற்றில் வீழ்ந்து சிறுவன் பலி

க.அகரன்



வவுனியா - கள்ளிக்குளம் பகுதியில் 8வயது சிறுவன் கிணற்றினுள் தவறி விழுந்து உயிரிழந்துள்ள சம்பவம் சனிக்கிழமை (16) இடம்பெற்றுள்ளது.

கள்ளிக்குளம் பகுதியைச் சேர்ந்த க.டிலக்சன் என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார். குறித்த சிறுவன் கிணற்றுப் பகுதிக்குச் சென்று தண்ணீர் எடுக்க முயன்ற போது, கிணற்றினுள் தவறி வீழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. உறவினர்களால் சிறுவன் மீட்கப்பட்ட போதும் அவன் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பாக ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## கசிப்பு உற்பத்தி நிலையம் சுற்றிவளைப்பு

எஸ்.தில்லைநாதன்



வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொன்னாலை தெற்கு, நெல்லியான் பகுதியில் கசிப்பு உற்பத்தி செய்யும் இடம் ஒன்று சனிக்கிழமை (16) காலை வட்டுக்கோட்டை பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

இதன்போது, 166 லீற்றர் கோடா, 10. 5 லீற்றர் கசிப்பு என்பவற்றுடன் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்திய இரண்டு பெரிய கொள்கலன்கள், இரண்டு சிறிய கொள்கலன்கள், இரண்டு செப்பு சுருள் என்பவற்று மீட்கப்பட்டுள்ளதுடன் 21 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## ஆடு திருடிய இருவர் கைது

மூளாய் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் உள்ள வீடொன்றிலிருந்து ஆடு திருடிச் சென்ற இருவர் வட்டுக்கோட்டை பொலிஸாரால் சனிக்கிழமை (16) கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமது வீட்டில் கட்டி வைக்கப்பட்டிருந்த ஆடொன்று களவாடப்பட்டுள்ளதாக ஆட்டின் உரிமையாளர் வெள்ளிக்கிழமை (15) அன்று வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

அதற்கமைய விசாரணைகளை முன்னெடுத்த வட்டுக்கோட்டை பொலிஸார், மூளாய் தண்ணீர் தொட்டியடி பகுதியைச் சேர்ந்த 37 மற்றும் 38 வயதுடைய இரண்டு சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்குப் பின்னர் சந்தேக நபர்களை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பொலிஸார் தெரிவித்தனர்.

# கோட்டைகளை தகர்த்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல்

இதுவரை காலமும் இலங்கை வரலாற்றில் நாட்டை ஆட்சி செய்த பிரதான கட்சிகள் தமக்கென வாக்கு வங்கிகளையும், வாக்கு கோட்டைகளையும் கட்டி வைத்திருந்தன. அவற்றில் சில உதாரணங்களாக வடக்கு, கிழக்கு என்பது தமிழரசுக் கட்சியின் வாக்கு வங்கியாக அமைந்திருந்ததுடன், எப்போதும் அவர்களே முதல் ஸ்தானத்தைப் பெற்று வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.
கொழும்பு மத்தி, கொழும்பு வடக்கு தொகுதிகள் காலகாலமாக ஐக்கிய தேசிய கட்சி அதனைத் தொடர்ந்து பிரேமதாச வழியில் வந்த ஐக்கிய மக்கள் சக்தியின் கோட்டையாக அமைந்திருந்தது.
தென் பகுதியைப் பொறுத்தமட்டில் மகிந்த ராஜபக்ஷவின் கொடி கட்டிப் பறந்த ஹம்பாந்தோட்டை மாவட்டத்தையும், மாத்தறை மாவட்டத்தையும் குறிப்பிட முடியும்.
அதுபோலவே மலையகத்தைப் பொறுத்தமட்டிலும், வழமையாக ஐக்கிய தேசிய கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஐக்கிய மக்கள் சக்தி போன்ற கட்சிகளின் ஆதிக்கம் செறிந்து காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.
இம்முறை பொதுத் தேர்தலில் இந்தக் கோட்டைகள் அனைத்துமே தகர்க்கப்பட்டு, அனைத்திலும் தேசிய மக்கள் சக்தி அமோக வெற்றியீட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.
பாரம்பரிய அரசியல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் எனும் நோக்கில், புதிய தரப்பினருக்கு வாய்ப்பளித்துப் பல புது முகங்களை இம்முறை மக்கள் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்துள்ளனர். பழைய முகங்கள் பல தோல்வியைத் தழுவியுள்ள நிலையில், அவற்றில் ஒரு சிலர் கடந்த காலங்களில் பாராளுமன்றத்தில் தமது திறமைகளை வெளிப்படுத்தி, அநீதிக்கு எதிராகக் குரல் எழுப்பியவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.
தமிழ் பேசும் மக்களைத் தமிழ் பேசுவோரே ஆட்சி செய்ய வேண்டும் எனும் ஒரு மனநிலை மாறி, இம்முறை பல மாற்றங்களை அவதானிக்க முடிந்துள்ளது. மலையகத்திலும் பெரும்பாலும் தமிழ்பேசும் மக்கள் வாழும் நிலையில், அங்கும் இம்முறை பாராளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள தமிழ்பேசும் பிரதிநிதிகளின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது. கொழும்பை பொறுத்தமட்டில் வழமையாகத் தெரிவாகும் ஒரு பிரதிநிதித்துவமும் இல்லாமல் போயுள்ளது. மாறாக, கவனம் செலுத்தப்பட வேண்டிய முக்கிய விடயமாக, மாத்தறை மாவட்டத்தில் தேசிய மக்கள் சார்பாகப் போட்டியிட்ட ஒரு தமிழ் பேசும் பெண்மணி இம்முறை அப்பகுதியிலிருந்து பாராளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.
அதுபோன்று, பதுளையிலிருந்தும் இரண்டு தமிழ் பேசும் பிரதிநிதிகள் பாராளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.
முழு நாட்டையும் ஒன்றிணைத்து, ஒரே விதமாகச் சிந்திக்க வைத்த ஒரு தேர்தலாக இம்முறைத் தேர்தல் அமைந்திருந்தது.
பெரும்பான்மையுடன் பலத்தை வென்றுள்ள தேசிய மக்கள் சக்தி, இதுவரை காலமும் பேணிக் காத்து வரும் ஒழுக்கமாகக் கொள்கைகளைத் தொடர்ந்தும் கட்டிக் காத்து, முழு நாட்டு மக்களின் ஏகோபித்த எதிர்பார்ப்பான அரசியல் மாற்றத்துடன், பொருளாதார சுபிட்சத்துக்குத் தார்மீக பொறுப்பாக அமைந்துள்ளது.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk

# தட்டிக் கழித்துவிட முடியாத வெற்றி

**லக்ஸ்மன்**

தட்டிக் கழித்துவிட முடியாதபடியான வெற்றியை ஜே.வி.பியை பிரதான தலைமையாகக் கொண்ட தேசிய மக்கள் சக்தி பெற்றுக் கொண்டிருக்கிறது.
நம்பிக்கைகளின் அடிப்படையிலேயே பொருளாதாரம் உள்ளிட்ட ஏனைய துறைகளிலும் சரி அரசியலிலும்கூட மக்களால் சில முடிவுகள் எடுக்கப்படுகின்றன.
அந்த வகையில் தேசிய மக்கள் சக்திக்குத் தீர்க்கமான வெற்றியை வடக்கு கிழக்கு, மலையகம் உள்ளிட்ட நாட்டின் அனைத்து பிரதேசங்களையும் சேர்ந்த மக்கள் வழங்கியிருக்கிறார்கள்.
இந்த நாட்டை மாறிமாறி ஆட்சி செய்துவந்த கடந்த கால ஆட்சியாளர்களுக்கு இது ஒரு செய்தியைச் செல்லியிருப்பதாகவே கொள்ளமுடியும். அந்தச் செய்தி இலங்கையின் அரசியல் பொருளாதார விடயங்களில் மக்களின் விருப்புடனான மாற்றம் தேவை என்பதே.
இது இலங்கையின் அரசியல் வரலாற்றில் புதிய திருப்பத்தையும் அரசியல் கலாசாரத்தையும் ஏற்படுத்துவதற்குக் காரணமாக அமைய வேண்டும்.
உண்மையில் இந்த வெற்றியானது எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், பெரும்பான்மை நிச்சயத்துடன் எதிர்பார்க்காத வெற்றியே. வடக்குக் கிழக்கு மக்களைப் பொறுத்தவரையில் நாட்டை நெருக்கடியிலிருந்து மீட்டெடுப்பதற்கும், இந்த நாட்டில் புரையோடிப் போயிருக்கும் இனப் பிரச்சினைக்கான, தமிழர்களின் அடிப்படை அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும். கடந்த கால தமிழ் அரசியல் தலைவர்களில் நம்பிக்கை இல்லை. நாட்டில் இனியும் பாகுபாடான செயற்பாடு தேவையற்றது என்பவற்றையே வெளிப்படுத்தியிருக்கிறது.

நடந்து முடிந்த தேர்தல் பிரசாரங்களில் இனவாதம், பிரதேச வாதம், தேசியம், பெருந்தேசியம், தமிழ்த் தேசியம் போன்றன கோலோச்சியிருந்தாலும் மக்களின் கடந்த கால அரசியல்களின் மீதான வெறுப்பின் பிரதிபலனே அறுவடை செய்யப்பட்டிருக்கிறது.

தேவையற்றதாக இருந்த பல விடயங்கள் களையப்பட்டிருக்கின்ற என்றும் கொள்ளலாம். இருந்தாலும் அது முழுமையாக நடைபெற்றுவிடவில்லை என்பதும் நினைவிலிருக்க வேண்டும் என்ற எச்சரிக்கையும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது நடைபெறவிருக்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஆட்சியின் மூலமே முழுமைப்படுத்தப்படவேண்டும்.

எது எப்படியானாலும், வடக்குக் கிழக்கில் தேசிய மக்கள் சக்தியை நோக்கியதான அலை உருவாகியிருப்பதாக தகவல்கள் வெளிவந்திருந்த வேளை இதற்கெதிரான பிரச்சாரங்களை வடக்கு கிழக்கிலுள்ள தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகள் மேற்கொண்டிருந்தார்கள். ஆனால் அது சரியானதாக, முறியடிக்கக் கூடியதாக, போதுமானதாக இல்லை என்கிற கருத்துகளும் வெளிவந்தருந்தன. அதுவே முடிவினையும் வெளிப்படுத்தியிருக்கிறது.

வடக்கு கிழக்கின் அனைத்து மாவட்டங்களிலும் தேசிய மக்கள் சக்தி ஆசனங்களைப் பெற்றுக் கொண்டிருக்கிறது. இலங்கையின் மட்டக்களப்பில் மாத்திரமே தேசிய மக்கள் சக்தியல்லாமல் இலங்கை தமிழரசுக் கட்சி பெரும்பான்மையைப் பெற்றுக் கொண்டிருக்கிறது.

இது மட்டக்களப்பு மக்களின் தவறா என்பது புரியாத விடயமே. தமிழ்த் தேசியத்தின் பால் வடக்கு கிழக்கு தமிழர்களுக்கு இருக்கின்ற பற்றானது வடக்கு மக்களை வைத்தே கணிப்பிடப்படுகின்ற வழக்கத்தினை அவர்கள் மாற்றியமைத்திருக்கிறார்கள் என்றே இந்த இடத்தில் சொல்ல வேண்டும்.

நடைபெற்ற தேர்தலில் தமிழர்களுக்கான தமிழ்த் தேசிய அரசியலானது தமிழ் மக்களது எதிர்பார்ப்பு, விருப்பங்களின் அடிப்படையிலேயே நடைபெறவேண்டும் என்றவகையில், தமிழ் மக்களுக்கான உரிமை அரசியல் பேசியவர்கள் உரிமையுடன் கூடிய அபிவிருத்தி எனும் கோசத்தினை முன்வைத்திருந்தனர். இது கூட நடைபெறலாம் என்ற எண்ணம் பலரிடமிருந்தாலும் அவ்வாறான தமிழ் அரசியல்வாதிகளின் தேவை தேசிய மக்கள் சக்திக்குத் தேவையற்றது என்றாகியிருக்கிறது.

இந்த இடத்தில் தான், மக்கள் விடுதலை முன்னணியாக இருந்து தேசிய மக்கள் சக்தியாகப் பரிணாமம் பெற்ற கட்சி ஆட்சிக்கு வரும் முன்னரும் ஆட்சிக்கு வந்த பின்னரும் வட கிழக்குத் தமிழர் தாயகம் தொடர்பாக, தமிழர்களின் தார்மீக உணர்வுகள் தொடர்பாகத் தெளிவான புரிதலுடன் இருக்கிறதா என்ற கேள்விகள் தேர்தல் காலங்களில் எழுப்பப்பட்டன. நாட்டில் ரோஹண விஜேயவீர தலைமையிலான ஜே.வி.பி. ஆயுதப் புரட்சிக்கு வழிவகுத்திருந்தது. ரோஹண விஜேயவீரவின் மரணத்தின் பின்னர் சோமவங்ச அமரசிங்க தலைவராக வந்த பின்னரும் கூட அவர்களின் போக்கில் மாற்றம் ஏற்பட்டிருக்கவில்லை. இக் காலத்தில் விமல் வீரவங்ச போன்றவர்கள் தமிழர் விரோதப் போக்கையே செயற்பாடாகக் கொண்டிருந்தனர்.

சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்தவேளை, வட கிழக்கில் சுனாமிக்குப் பின்னரான அபிவிருத்திக்கான பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்த ஜே.வி.பியினர் முதற் தடையாக இருந்தனர். 1990களில் புலிகள் ஆயுத ரீதியாக வலுவடைந்தவேளை இராணுவத்திற்குப் பெருந்தொகை சிங்கள இளைஞர்களை இணைத்து யுத்தத்தை உக்கிரப்படுத்தி தமிழர்களின் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்படக் காரணமாக அமைந்திருந்தனர்.

அதே நேரத்தில், இனப் பிரச்சினைத் தீர்வுக்காக மேற்கொள்ளப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தினை எதிர்த்து வந்ததுடன், தற்காலிகமாக இணைக்கப்பட்டிருந்த வடக்குக் கிழக்கு மாகாணங்களை நீதிமன்றம் சென்று தனித்தனியாகப் பிரித்து வைத்தார்கள் போன்ற பல குற்றச்சாட்டுகளெல்லாம் தமிழ் மக்களிடம் பயனற்றும் போயிருக்கின்றன.

அந்தவகையில், அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்ப்பதற்கான ஆணையை, மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்கான சாத்தியமான நடவடிக்கைகளாகத் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும்.

நாட்டில் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட தேவையற்ற வீண் விரயங்கள் தவிர்க்கப்படவேண்டும். உற்பத்தி மற்றும் விவசாயத் துறையில் புரட்சி ஏற்படுத்தப்பட வேண்டும். விவசாயிகள், கால்நடை வளர்ப்பார்கள், தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கும் உடனடியாக தீர்வு காணப்பட வேண்டும் போன்ற பல எண்ணப்பாடுகளுக்கு அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்கும் என்ற எதிர்பார்ப்பு மக்களிடம் காணப்படுகிறது.

இம்முறை ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் வரையில் மூன்று ஆசனங்களைப் பாராளுமன்றத்தில் கொண்டிருந்த ஒரு கட்சி நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் 159 ஆசனங்களைப் பெற்று ஆட்சியமைக்க இருக்கிறது. இது கடந்த பாராளுமன்றத் தேர்தலில் வெறுமனே சிங்கள மக்களின் பெரும்பான்மை வாக்குகளால் பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்று ஆட்சியமைத்த பொதுஜன பெரமுனவின் வெற்றியிலிருந்து முற்றுமுழுதான வேறுபாட்டுடன் கூடியது. அதாவது வடக்கு கிழக்கு தமிழ் மற்றும் மலையக மக்களினதும் ஆதரவுடன் நாடு தழுவிய வகையிலமைந்தது பெருமைப்படக்கூடியதாகும்.

மாற்று அரசியலுக்கான ஆடுகளத்தினை உருவாக்கிக் கொடுத்திருக்கின்ற மக்கள் தம்முடைய எதிர்காலத்தைக் குறித்துச் சிந்தித்திருக்கின்றனர். இருந்தாலும் நடைபெறுகின்ற வீணான விமர்சனச் செயற்பாடுகள், பெருமையடித்துக் கொள்ளும் நடவடிக்கைகள் எந்தப் பயனையும் கொடுக்காது என்ற வகையில் தேசிய மக்கள் சக்திக்குத் தூர நோக்குடனான நாட்டின் முன்னேற்றமே முன்னே இருக்க வேண்டும்.

எது எப்படியிருந்தாலும், இலங்கையில் புரையோடிப் போயிருக்கின்ற இனப் பிரச்சினைக்கான தீர்வாக புதிய அரசியலமைப்பானது உருவாக்கப்பட்டு ஒற்றையாட்சி முறை நீக்கப்பட்டுத் தீர்வொன்றுடனான நாடு உருவாக வேண்டும். இப்போதைய நிலையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினால் முடியுமானதே.

இது போன்றதொரு வாய்ப்பு நாட்டில் போரை முடிவுக்குக் கொண்டுவந்து சிங்கள மக்களின் மனங்களில் வெற்றி வீரனாக இருந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் வாய்த்திருந்தது. ஆனால், அது அவரால் மேற்கொள்ளப்படவில்லை.

கடந்த காலங்களில் கிழித்தெறியப்பட்ட டட்லி - செல்வா ஒப்பந்தம், பண்டா - செல்வா ஒப்பந்தம், சந்திரிகா அம்மையாரின் தீர்வுப் பொதி கிழிப்பு, நல்லாட்சி அரசாங்க மைத்திரி கால அரசியலமைப்புத் திருத்தம் கிடப்பில் போடப்பட்டுக் கைவிடப்பட்டமை போன்ற நிலைமை தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் ஏற்படாதிருக்க வேண்டும்.

முன்னைய அரசாங்கங்கள் தமிழ் மக்களை ஏமாற்றும் தந்திரோபாயத்தினை மிகக் கவனமாகவும் கனகச்சிதமாகவும் பெருந்தேசியவாதத் தனத்துடன் முன் நகர்த்தி வந்திருந்தது. இவ்வாறான நகர்வுகளற்றதாக வெளிப்படையானதும் இதயசுத்தியுடனும் முன்னெடுக்கப்படுகின்ற அரசியலமைப்பு மாற்றமே நாட்டில் தேசிய மக்கள் சக்தி எதிர்பார்க்கின்ற ஆதரவளித்த மக்கள் எதிர்பார்க்கின்ற நிலையினை ஏற்படுத்தும் என்பதே நிச்சயமானது.

தமிழ்த் தேசிய உரிமை ஒன்றே நோக்கம் என்றிருந்த தமிழ் மக்களுடைய அரசியல் நிலைப்பாட்டில் ஏற்பட்டிருக்கின்ற சரிவானது தேசியக் கட்சி ஒன்றை நோக்கி நகர்ந்தமை இதுவே முதல் தடவை என்றவகையில் இதனைத் தக்கவைத்துக் கொள்வதற்கான நகர்வுகள் தேசிய மக்கள் சக்தியிடம் இருக்கும் என்று நம்பிக்கை கொள்வோம்.

இதுவரை காலங்களாக அனுபவித்து வந்த கொடுமைகள் துன்பங்கள், தீர்வின்மைகளால் சலித்துப் போய் தங்களுடைய உரிமைகளைப் பெற்றெடுப்பதற்காக இயங்கிவந்த தமிழ் அரசியல் கட்சிகள், தமிழ் அரசியல்வாதிகளைப் புறந்தள்ளி ஒரு மாற்று அரசியலை எதிர்பார்க்கின்ற தமிழ் மக்கள் இந்த முயற்சியிலேனும் வெற்றியடையட்டும்.



## வாழ்வியல் தரிசனம்

ஒரே சொல் அதுவே மந்திரம். எவருக்காவது வாக்குறுதி அளித்திருந்தால், அதிலிருந்து புரளக்கூடாது. சிலர் பேசுவது ஒன்று செய்வது இன்னொன்று. அளித்த உறுதிமொழியைக் காற்றுடன் பறக்கவிட்டுவிடுவார்கள். சொல்லும் வார்த்தையில் உண்மை துலங்க வேண்டும். நியாய தர்மங்களில் இருந்து நழுவாது, செயலுருவில்க் காட்டினால், அவர்களின் வாழ்வு என்றுமே வசந்தம். சில வாக்குறுதிகளை நினைத்தபடி செய்யமுடியாமலும் போகலாம். சூழ்நிலையால் ஏற்படும் இடையூறுகள், மனித செயற்பாடுகளை இடைநிறுத்திவிடலாம். ஆனால், முடிந்தவரை முயற்சி செய்வது நல்லது. நடந்துவிட்ட தவறுகளை, உள்ளதை உள்ளபடி, உதவி கேட்ட நபரிடம் சொல்லிவிட வேண்டும். எவரையும் காத்திருக்க வைக்கலாகாது. மன்னிப்புக் கேட்டுவிடுவதால் மனப்பாரமும் குறைந்துவிடும். இன்றைய காலத்தில், வேலை பெற்றுத்தருகின்றேன் எனக்கூறி ஏமாற்றுபவர்களைப் பற்றி பலரும் அறிந்த விடயம். யோசிக்காமல் உறுதி வழங்கலாகாது. உங்கள் சக்திக்கு உட்பட்டு, உங்களால் செய்யக்கூடியவற்றுக்கு மட்டும் உறுதி வழங்கவேண்டும். பேச்சிலும் செயலிலும் நாணயம் வேண்டும்.

நன்றி- பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### அதிபர் விடுதியை பாருங்கள்

ஹட்டன் கல்வி வலயம், கோட்டம் இரண்டுக்கு உட்பட்ட பொகவந்தலாவ பிரதேசத்தில் இயங்கும் பாடசாலை ஒன்றுக்கு சொந்தமான அதிபர் விடுதி ஒன்று நீண்ட காலமாகப் பராமரிப்பு இன்றி கவனிப்பார் அற்ற நிலையில் காணப்படுகின்றது.

இந்த பாடசாலைக்கு சொந்தமான இந்த அதிபர் விடுதி சுற்றி காடுகளாகக் காட்சியளிப்பதாகவும் இந்த கட்டிடம் குறித்து உரிய அதிபர் கண்டு கொள்ளுவதில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்க நிதியுதவியில் அமைக்கப்பட்ட கட்டடம் தொடர்பில் ஹட்டன் வலய கல்விப் பணிமனை மத்திய மாகாண கல்வி திணைக்களத்தின் செயலாளர் மற்றும் மத்திய மாகாண ஆளுநர், கல்வி அமைச்சர் ஆகியோர் இந்த அதிபர் விடுதி தொடர்பில் நடவடிக்கை எடுக்க பட வேண்டுமெனப் பிரதேச வாசிகள் தெரிவித்தனர்.

இதனைச் சுத்தம் செய்து முறையாகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால், அதிபர் விடுதியாக அல்லாமல் ஒரு வகுப்பறையாகப் பயன்படுத்தலாம் என்றும் தங்களுடைய பிள்ளைகளை அப்பாடசாலைக்கு அனுப்பும் பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆகையால் உரிய தரப்பினர் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்றும் பெற்றோர் வலியுறுத்துகின்றனர்.

- எஸ் சதீஸ்

## Prime Groupக்கு இலங்கையின்
# சிறந்த தொழில் வழங்குநர் வர்த்தக நாம விருது 2024




Prime Group, “இலங்கையின் சிறந்த தொழில் வழங்குநர் வர்த்தக நாம விருது” இனை சுவீகரித்துள்ளது. 19ஆவது தொழில் வழங்குநர் வர்த்தக நாம விருதுகள் 2024 நிகழ்வின் போது இந்த உயர் கௌரவிப்பைப் பெற்றுக் கொண்டது. மனித வளங்கள் அபிவிருத்தி மற்றும் ஊழியர் நலன் பேணலுக்கான அர்ப்பணிப்பை கௌரவித்தும், நேர்த்தியான மற்றும் ஊக்குவிக்கும் பணிச்சூழலை ஏற்படுத்திக் கொடுத்தமைக்காகவும் இந்த உயர் கௌரவிப்பு வழங்கப்பட்டிருந்தது.

இலங்கையின் சிறந்த தொழில் வழங்குநர் வர்த்தக நாம விருதுகளுக்கு மனித வளங்கள் தலைமைகளின் சர்வதேச கட்டமைப்பான *World Federation of HR Professionals* மற்றும் *World HRD Congress* ஆகியவற்றினால் சான்றளிக்கப்பட்டுள்ளது. அண்மைய சர்வதேச சவால்களுக்கு மத்தியில், மனித வளங்கள் செயற்பாடுகளில் சிறப்பை பின்பற்றியிருந்த நிறுவனங்களை கொண்டாடும் வகையில் அமைந்துள்ளன.

நிறுவனத்தின் வெற்றிகரமான செயற்பாடுகளின் பிரதான அரணாக கருதப்படும், ஊழியர்கள் மீது *Prime Group* கொண்டிருக்கும் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் வகையில் இந்த விருது அமைந்துள்ளது. சிறந்த ஊழியர் அனுபவத்தை பெற்றுக் கொடுப்பதில் *PrimeGroup* இன் ஆற்றலை வரவேற்பதாக இந்த விருது அமைந்திருப்பதுடன், நிறுவனத்தின் நோக்கை நோக்கி பயணிக்கையில் அதில் அங்கம் பெறுவதையிட்டு ஊழியர்கள் பெருமையாக உணர்வதை உறுதி செய்வதாகவும் அமைந்துள்ளது.

*Prime Lands Residencies PLC., Prime Group* நிறைவேற்று பணிப்பாளர் ஷெஹானா பிராஹ்மனகே கருத்துத் தெரிவிக்கையில், “எமது சிறந்த சொத்தக, எம் ஊழியர்கள் அமைந்துள்ளனர். அவர்களின் நலன் என்பது எமது பிரதான முன்னுரிமையாகும். மகிழ்ச்சியான ஊழியர்களால் எமது பெறுமதி வாய்ந்த வாடிக்கையாளர்கள் மற்றும் நிறுவனத்தில் சிறந்த அக்கறை கொள்ளப்படும் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்” என்றார்.

சிறந்த ஊழியர் வர்த்தக நாமமாக *Prime Group* தெரிவு செய்யப்பட்டமையில், எதிர்காலத்துக்கு தயாரான பணியாளர்களை கட்டியெழுப்புவது மற்றும் சவால்களுக்கு மத்தியில் இயங்கக்கூடிய நிறுவனத்தை கட்டியெழுப்புவது போன்றவற்றில் தொடர்ச்சியாக காண்பித்திருந்த முயற்சிகள் முக்கிய பங்களிப்பை வழங்கியிருந்தன. திறன் முகாமைத்துவம், பணிச் சேர்ப்பு மூலோபாயங்கள் மற்றும் பணியிடத்தல் சுகாதாரத்தை ஊக்குவித்தல் போன்ற குழுமத்தின் வழிமுறைகள் இதர நிறுவனங்களுக்கும் அவற்றை பின்பற்றுவதற்கு முன்மாதிரியானதாக அமைந்துள்ளது. *Prime Group* இன் மனித வளங்கள் செயற்பாடுகள் நிறுவனத்தின் பெறுமதிகளில் ஆழமாக ஊடுருவியுள்ளதுடன், தலைமைத்துவ பிரத்தியேக வழிமுறை மற்றும் கலாசாரம் ஆகியன அணியினரை மேம்படுத்தப்பட்ட ஈடுபாடு மற்றும் உரிமையாண்மை போன்றவற்றை நோக்கி நகர்த்துவதாக அமைந்துள்ளது.

தொற்றுப் பரவல் காலம் முதல் தொடர்ச்சியாக எழுந்திருந்த சவால்கள் நிறைந்த சூழலிலும் புத்தாக்கமாகவும் வளர்ச்சியை தக்க வைக்கும் வகையிலும் பணியாற்ற ஊழியர்களை வழிநடத்தியிருந்த மைக்கான பிரதிபலிப்பாக *Prime Group* இன் வெற்றி அமைந்துள்ளது. மாற்றத்தை நோக்கிய குழுமத்தின் வழிமுறையினால் உற்பத்தித் திறன் மாத்திரம் மேம்படுத்தப்படாமல், நிறுவனத்தின் பெறுமதியும் உயர்வடைந்துள்ளது. அத்துடன், உயர் மனநிலை மற்றும் சிறந்த பணிப் பெறுபேறுகளை பெற்றுக் கொடுக்கும் சூழலையும் நிறுவனத்தில் ஏற்படுத்தியுள்ளது.

*Prime Group* இன் நிறைவேற்று தலைமைத்துவ அதிகாரி சன்மித் தருண கருத்துத் தெரிவிக்கையில், “குழுமத்தின் வெற்றியின் பின்னணியில் பிரதான அரண்களாக எமது ஊழியர்கள் திகழ்கின்றனர் என்பதை மீள உறுதி செய்யும் வகையில் இந்த விருதை வெற்றியீட்டியிருந்தமை அமைந்துள்ளது. சகல பங்காளர்களுக்கும் சிறந்த பணியிடத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான அர்ப்பணிப்பை மீள உறுதி செய்வதாகவும் இது அமைந்திருந்தது” என்றார்.

சிறந்த முன்னுதாரணமாக *Prime Group* தொடர்ந்தும் திகழ்வதுடன், இலங்கையில் தொழிலாளர் வர்த்தக நாமத்தில் புதிய நியமங்களை ஏற்படுத்துவதிலும், இதர நிறுவனங்களையும் ஊழியர்களுக்கு முக்கியத்துமளித்து, சிறப்பு மற்றும் பராமரிப்பு நிறைந்த கலாசாரத்தை கட்டியெழுப்பவும் ஊக்குவிப்பதாக அமைந்துள்ளது.

# சோலார் வலுக்கட்டமைப்பு அன்பளிப்பு

கொமர்ஷல் வங்கியும் ஹேலிஸ் சோலாரும் இணைந்து திஸ்ஸமஹாராமவிலுள்ள ஸ்ரீ கவுந்திஸ்ஸ தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் திஸ்ஸமஹாராம ரஜமஹா விகாரை ஆகியவற்றின் பயன்பாட்டிற்காக ஒளி மின்னழுத்த சோலார் தொகுதி மின்சார விநியோக அமைப்பை அண்மையில் நன்கொடையாக வழங்கின.

40kW சக்தியுடைய மின் விநியோக அமைப்பான சோலார் வலுக்கட்டமைப்பானது ஸ்ரீ கவுந்திஸ்ஸ தொழிற்பயிற்சி நிலையத்தில் தொழில் பயிற்சி பெறும் மாணவர்களுக்கும் மற்றும் நாடளாவிய ரீதியில் இருந்து விகாரைக்கு வருகை தரும் பக்தர்களுக்கும் பயனளிப்பதுடன் மேலும் இரு நிறுவனங்களினதும் மின்சார செலவைக் குறைக்கவும் உதவுகிறது.

இரண்டு நிறுவனங்களின் நன்கொடையானது கொமர்ஷல் வங்கி மற்றும் ஹேலிஸ் சோலார் ஆகியவற்றுக்கு இடையேயான மூலோபாய ஒத்துழைப்பில் இருந்து, வங்கியின் ‘திரிபல பசுமை மேம்பாட்டுக் கடன்’ திட்டத்தின் கீழ் சலுகை விதிமுறைகளை வழங்குவதற்காக, ஹேலிஸ் சோலாரிடமிருந்து பல பிரத்தியேக நன்மைகளுடன் சூரிய மின்சக்தி தொகுதிகளை வர்த்தகங்களுக்கு கொள்வனவு செய்யும் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது.



சோலார் வலுக்கட்டமைப்பு நன்கொடையாக வழங்கப்பட்ட நிகழ்வில், கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி சனத் மனதுங்க, வங்கியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி எஸ். பிரபாகர், ஹேலிஸ் சோலார் முகாமைத்துவப் பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி ஹசித் பிரேமதிலக மற்றும் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் டாக்டர் கே.ஏ.லலிதா தீரா ஆகியோர் நினைவுப் படிகத்தை திரை நீக்கம் செய்து வைக்கின்றனர்.

# நாளைய தலைமுறையின் எதிர்காலம் என்னவாகும்







**பாத்திமா சபா,
மூன்றாம் வருடம்,
ஊடக கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.**

ஒவ்வொரு நாள் விடியலிலும் பத்திரிகைகளைப் புரட்டிப் பார்க்கும் பொழுதோ தொலைக்காட்சியைப் போட்டுப் பார்க்கும் பொழுதோ அல்லது கையடக்க தொலைப்பேசிகளில் சமூக ஊடகங்களில் உள் நுழையும்போதோ நம் காதுகளுக்கு அடிக்கடி கேட்கும், கண்களுக்கு அடிக்கடி தென்படும் முக்கிய செய்தியாக இருப்பது போதைப்பொருள் பாவனை குறித்த செய்திகளாகும்.

போதைப்பொருள் பாவனை குறித்த ஒரு செய்தியாவது ஒவ்வொரு நாளும் தலைப்புச் செய்தியாக வெளிவந்து கொண்டுதான் இருக்கின்றது. இதனை நாள்தோறும் பார்த்தும் கேட்டும் எங்களுக்கே போதுமாய் போய்விட்டது. எவ்வாறு சமூக ஊடகங்களில் பரப்பப்படும் செய்திகள் மிக வேகமாக மக்களைச் சென்றடைகின்றதோ அதேபோல், அதிவேகமாக இன்றைய உலகில் போதைப் பொருள் பாவனையும் தீவிரமடைந்துள்ளமை மறுக்க முடியாத உண்மையாகும்.

உலகின் பல பகுதிகளில் மிகத் தீவிரமாக வளர்ச்சி அடைந்து கொண்டு வரும் போதைப்பொருள் பாவனையானது எங்களுடைய நாட்டில் ஆரம்பத்தில் நகர்ப்புறங்களை முன்னிட்டே காணப்பட்டாலும் இன்றைய காலங்களில் அடிப்படை வசதிகள் கூட இல்லாத குக்கிராமங்களிலும் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளமை, ஆச்சரியத்தை அளிக்கின்றது.

இளைஞர்களின் ஆளுமை விருத்தியில் தாக்கம் செலுத்துகின்றமை இன்றைய காலங்களில் இளைஞர்களின் ஆளுமை விருத்தியை முற்றாகத் தடுக்கும் முட்டுக்கட்டையாகவே இந்தப் போதைப்பொருள் பாவனை காணப்படுகின்றது. ஒரு நாட்டிற்குப் பயங்கரவாதம் என்பது எவ்வளவு ஆபத்தானதோ அதே அளவிற்கு இளைஞர்களின் ஆளுமையை முற்றாக அழிக்கக் கூடிய போதைப்பொருள் பாவனையும் மிகவும் ஆபத்தானதே.

நாட்டின் எதிர்காலத் தலைவர்களாகச் செயற்படக்கூடிய இளம் தலைமுறையினர், மிகப்பெரிய கனவுகளையும், திறமைகளையும் கொண்டவர்களாக இருப்பதால், இவர்கள் எதிர்கால சமூகத்தின் நம்பிக்கையாகப் பார்க்கப்படுகிறார்கள்.

ஆனால், போதைப்பொருட்களின் பாவனை இவற்றைச் சீர்குலைக்கின்றது. மேலும், சமூகத்தில் இளைஞர்களின் செயல்பாடுகள் குறைந்து, அவர்கள் சமூகத் தொடர்புகளிலிருந்து விலகுகின்றனர். இது அவர்களின் சமூகத்தோடு இணைந்து செயற்படும் உறவு நிலையை முற்றிலும் பாதிக்கின்றது. இதனால் இவர்கள் சமூகத்திலிருந்து தனிமைப்படுகின்றனர்.

அதேபோல், சமூகத்தில் அவர்களுக்குரிய இடத்தை இழக்கின்றனர். இளைஞர்கள் மத்தியில் போதைப்பொருட்களின் சீரற்ற பாவனை இதயநோய், புற்றுநோய், நரம்பு நோய் போன்ற பல்வேறு உடல் நோய்களை உண்டாக்குகிறது. இதனால் இளைஞர்கள் சீரான உடல் ஆரோக்கியத்தை இழந்து கொண்டு இருக்கின்றனர். அவ்வாறே இளைஞர்களின் உடல் மற்றும் மனதின் ஆற்றல்கள் முற்றிலும் குறைந்து, அவர்களின் இலட்சிய பாதையின் வழியே பயணித்து இலக்குகளை அடைவதில் தடை ஏற்படுகிறது.

போதைப்பொருள் கடத்தலுக்கு சமூக ஊடகத்தைப் பயன்படுத்தல்

இளைஞர்களின் மத்தியில் சமூக ஊடகப் பாவனை இன்றைய காலங்களில் அதிகரித்துள்ளமை நாம் அனைவரும் அறிந்த விடயமே. இந்த சமூக ஊடகங்களின் ஊடாகவே போதைப்பொருட்களைப் பரிமாற்றம் செய்வதற்கான வழிவகைகளைச் சிலர் மேற்கொண்டு வருகின்றனர்.

சமூக ஊடகங்களில் போதைப்பொருள் பாவனையானது எவ்வாறு பரிமாற்றம் செய்யப்படுகிறது என்பதை அறிந்து கொள்வதற்காக சமூகத்தில் போதைப்பொருள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் சிலரோடு கலந்துரையாடிய போது அவர்கள் பல்வேறு விடயங்களைப் பகிர்ந்து கொண்டார்கள்.

அவற்றினை நோக்கும் பொழுது குறிப்பாக முகநூலில் உள்ளிட்ட சமூக ஊடகத் தளங்கள் மூலம் இரகசியக் குழுக்கள் உருவாக்கப்பட்டு அதனூடாக இளைஞர்களை இணைத்து போதைப்பொருள் பாவனையை ஊக்குவிக்கும் சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அவர்கள் தெரிவித்தனர்.

குறிப்பாக எங்களுடைய நாட்டில் இசைக் கச்சேரிகள் களியாட்டங்கள் போன்றன நடத்துவதற்குச் சட்டத்தில் தடை இல்லை. எனவே சமூக ஊடகங்கள் ஊடாக இசைக் கச்சேரிகள், களியாட்டங்களை ஏற்பாடு செய்யும் போர்வையில் அப்படியான நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து அதன் ஊடாக மறைமுகமாக இளைஞர்களுக்குப் போதைப்பொருள் பாவனையை ஊக்குவிக்கின்றார்கள்.

உண்மையில் இப்படியானவர்களது நோக்கம் போதைப்பொருட்களை விற்பனை செய்ய வேண்டும் என்பதே. எனவே, அதனை இளைஞர்களுக்குப் பழக்கப்படுத்திக் கொடுக்க வேண்டும், இதற்காக ஒற்றுமை மிக்க நட்பு வட்டாரங்கள் போன்று இணைந்து எண்ணிலடங்காத இளைஞர்களை இணைத்து அவர்களின் வாழ்வில் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். இதனை அறியாமல் அதில் சிக்கிக் கொள்ளும் அப்பாவி இளைஞர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள்.

குற்றவாளிகள் ஒற்றுமையாகவும் - சிந்திக்க வேண்டிய சமூகம் பிளவுபட்டும் காணப்படுகின்றமை.

முக்கியமாகப் போதைப்பொருள் பாவனையை ஊக்குவிக்கும் நபர்கள் தங்களிடம் இன, மத, நிற அடிப்படையில் எந்த வேறுபாடும் இல்லாமல், போதைப்பொருளை ஊக்குவிப்பதற்கு வழிவகைகளைச் செய்கின்றனர். ஆனால், ஒரு சமூதாயத்தவர்களாக ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய மக்கள் இன, மத மற்றும் அரசியல் கொள்கை அடிப்படையில் பாகுபாட்டுடன் செயற்படுவது, இவ்வாறான சமூக விரோத செயற்பாடுகளை மேற்கொள்ளும் நபர்களுக்கு நல்லதொரு சந்தர்ப்பமாகக் காணப்படுகின்றது. இதனால் சமூகத்தில் நடக்கும் அட்டூழியங்களையும், பிரச்சினைகளையும் ஒன்றிணைந்து தட்டிக் கேட்பதற்கு எவரும் இல்லாத நிலைமை உருவாகி இருக்கின்றது. எனவே, இப்படியான சமூக பாகுபாட்டினை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, போதைப் பொருள் பாவனையை ஊக்குவிக்கும் ஊக்குவிப்பாளர்கள் எண்ணிலடங்காத இளைஞர்களைத் தவறான வழியில் அழைத்துச் செல்கின்றனர்.

## தொற்று நோயாகப் பரவுதல்

சமூகத்தில் ஆண்-பெண் என்ற வேறுபாடு இன்றி போதைப்பொருள் பாவனை அதிகரித்து இருப்பது மிகுந்த கவலையை ஏற்படுத்துகின்றது. எத்தனையோ வலிமையான விழிப்புணர்வு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் ஆபத்துகள் மற்றும் தாக்கங்கள் குறித்த புரிதல் இன்னும் சரியாக மக்களைச் சென்றடையவில்லையோ என்ற எண்ணம் வேதனை அளிக்கின்றது. ஆரம்பக் காலங்களில், போதைப்பொருள் பாவனை என்பது ஆண்களிடம் மட்டுமே அதிகம் இருந்தது. ஆனால் இப்போது, பெண்களும். இதற்கு அடிமையாகி விட்டனர். வேலைப்பளு, மன அழுத்தம், சமூகப்போக்குகள் போன்ற காரணங்களால் சில பெண்களும் போதைப்பொருள் பாவனைக்குப் பழக்கமாகி விட்டனர்.

ஆண்கள், பெரும்பாலும் தங்கள் சமூக சூழ்நிலையால் அல்லது நண்பர்கள் வட்டாரத்தின் மூலம் போதைப்பொருள் பாவனையில் அதிக ஈடுபாடு காட்டுகின்றனர்.

அவர்கள் தங்களின் மன அழுத்தத்தை அடக்க அல்லது சமூகத்தில் அடைய முடியாத மதிப்பை அடையப் போதைப்பொருள்களைப் பயன்படுத்த ஆரம்பிக்கிறார்கள். இதனால், அவர்கள் அதற்கு அடிமையாகி, அதன் தாக்கத்தை முற்றிலும் உணராமல் போகின்றனர்.

## சிந்தனை இழந்து கிடக்கும் நாளைய தலைவர்கள்

பொதுவாக நமது இளைஞர், யுவதிகள் குதூகலம் என்ற பெயரில் கொண்டாட்ட நிகழ்வுகளை ஏற்பாடு செய்து தற்கால மகிழ்ச்சிக்காகப் போதைப்பொருள் பாவனையில் மூழ்கி முழு வாழ்க்கையையும் பாழாக்குகின்றனர்.

சமூக சிந்தனையோடு செயற்பட்டுக் கொண்டிருக்கும் சில சமூக செயற்பாட்டாளர்களோடு, சமூகத்தில் இளைஞர்கள் மத்தியில் அதிகரித்திருக்கும் போதைப்பொருள் பாவனை தொடர்பாக வினாவியபோது மேற்கண்டவாறு கூறினார்கள்.

“போதைப்பொருள் பாவனையானது ஒரு தொற்று நோயைப் போன்றது. முதல் கட்டத்தில், மனதில் ஆசையை உண்டு பண்ணி கொஞ்சம் கொஞ்சமாக இளைஞர்களின் சிந்தனைத் திறன், மனோநிலை மற்றும் வாழ்வியல் தகுதிகளை முழுவதுமாக அழித்தும் குறைத்தும் விடுகின்றது. மேலும், போதைப்பொருள் பாவனை மனதையும் உடலையும் முழுமையாக ஆட்கொண்டு, அவர்கள் தம்மை இழந்து, எதிர்காலத்தை இழந்து விடுவதற்குக் காரணமாக அமைந்து விடுகின்றது” என்று கூறினார்கள்.

போதைப்பொருள் பாவனையானது சமூகத்தில் ஊகிக்க முடியாத குற்றச் செயல்களுக்கு வழிவகுக்கிறது. கொலை, திருட்டு, பாலியல் வன்முறை போன்ற குற்றங்கள் அன்றாடம் போதைப்பொருள் பாவனையால் அதிகமாகின்றன. இது சமுதாயத்தின் ஒற்றுமையைச் சிதைத்து, குடும்பங்களைச் சீரழிக்கின்றது.

போதைப்பொருள் பாவனையின் விளைவாக, சமூகத்தின் பொருளாதாரமும், வேலைவாய்ப்பு பாதிப்படைகின்றது. மாயையில் மதி இழந்து கிடக்கும் போதைப்பொருள் பாவனையாளர்கள் வேலை தேடுவதில் திறனற்றவர்களாகவே அடையாளம் காணப்படுகின்றனர். போதைப்பொருள் பாவனை மற்றும் அதன் விளைவுகளைத் தவிர்க்க சமூகத்தின், அனைத்து தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும். பிளவுபட்டு இருக்கும் சமூகம் ஒன்றிணைந்து செயற்பட முன் வேண்டும். போதைப்பொருள்களுக்கெதிரான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், மருத்துவ மற்றும் மனநல ஆலோசனைகள், சட்டத்தின் கடுமையான நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கு கை கோர்க்க வேண்டும். முடிந்த அளவு போதைப்பொருள் பாவனையாளர்களுக்கு எதிரான எங்கள் எதிர்ப்பை வெளிக்காட்ட வேண்டும்.

நம் முன் போதைப்பொருட்களை யாரும் பயன்படுத்தினால் அருவெறுக்கத்தக்க விடயமாகப் பார்த்து விட்டு அந்த இடத்திலிருந்தே நகர்ந்து செல்வது சிறப்பாக இருக்கும். அப்போதே சீரழிந்த சமூகத்திலிருந்து சீர்மிகு சமூகத்தை நோக்கி பயணம் செய்ய முடியும்.



சீனா

### கத்தி குத்தில்

# எண்மர் பலி

ஊக்ஸி நகரில், 21 வயது இளைஞர் நடத்திய கத்திக் குத்து தாக்குதலில், 8 பேர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், 43 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

சீனாவின் வூக்ஸி நகரில் கல்வி நிறுவனம் ஒன்றில் கல்வி பயிலும் 21 வயது இளைஞர் ஒருவரே, கண்ணில் தென்பட்டவர்கள் மீது சரமாரியாகக் கத்திக்குத்துத் தாக்குதல் நடத்தியுள்ளார். தகவலறிந்து அங்கு விரைந்து சென்ற பொலிஸார், காயமடைந்தவர்களை மீட்டு அருகிலுள்ள வைத்தியசாலையில் அனுமதித்தனர்

பொதுமக்கள் ஆயுதம் வைத்திருப்பதற்கு அனுமதியில்லாத அந்த நாட்டில், இதுபோன்ற தாக்குதல்கள் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

சொந்த பிரச்சினைகள் காரணமாகச் சமுதாயத்தைப் பழிதீர்க்க இத்தகைய தாக்குதல்கள் நடத்தப்படுவதாகக் கூறப்படுகிறது.



ஈரான்

## ஹிஜாப் அணியாத பெண்களுக்கு சிகிச்சை

ஹிஜாப் அணியாத பெண்களுக்குச் சிகிச்சை அளிக்கும் நோக்கத்தில் மனநல சிகிச்சை மையத்தைத் திறக்கவுள்ளதாக, ஈரான் அரசு அறிவித்துள்ளது

ஈரான் நாட்டில், இஸ்லாமிய மத சட்டங்களின்படி ஹிஜாப் அணிவது கட்டாயம் என்றாக்கப்பட்டு உள்ளது. இதை அந்நாட்டு அரசு கடுமையாகச் செயற்படுத்தி வருகிறது. அதேநேரம் சமீப காலமாக அங்குள்ள பெண்கள் இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள். ஹிஜாப் விதியை நீக்க வேண்டும் என்றும் பேச்சுகள் எழுந்துள்ளன.

இதற்கிடையே ஹிஜாப் விதியை மீறும் பெண்களுக்குச் சிகிச்சை அளிக்க மனநல சிகிச்சை மையத்தைத் திறக்க உள்ளதாக, ஈரான் அரசு அறிவித்துள்ளது.

இதற்காக ஹிஜாப் சிகிச்சை கிளினிக் நிறுவப்பட்டுள்ளதாக, மகளிர் மற்றும் குடும்பத் துறையின் தலைவரான மெஹ்ரி தலேபி தரேஸ்தானி கூறியுள்ளார்.

இந்த கிளினிக்குகளில், ஹிஜாப் அணிய மறுக்கும் பெண்களுக்கு அறிவியல் மற்றும் உளவியல் சிகிச்சையை வழங்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

சில நாட்களுக்கு முன்னர் ஈரானிய பல்கலைக்கழகத்தில் ஒரு மாணவி ஆடை கட்டுப்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக உள்ளாடைகளுடன் வந்தது பெரிய அளவில் பேசப்பட்டது. பல்கலைக்கழக நிர்வாகமும், அரசும் அந்தப் பெண்ணுக்கு மனநலம் சரியில்லை என்று முத்திரை குத்தியது. அந்த மாணவி யார் என்பது குறித்த தகவல் இதுவரை வெளியாகவில்லை.

இந்நிலையில், ஈரான் அரசின் இந்த அறிவிப்புக்கு, மனித உரிமை அமைப்புகள் மற்றும் மகளிர் அமைப்புகள் கடும் எதிர்ப்புகளைத் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக ஈரான் மனித உரிமைகள் சட்டத்தரணி ஹுசைன் ரைசி கூறுகையில், "ஹிஜாப் அணிய மறுக்கும் பெண்களுக்குச் சிகிச்சை அளிக்க வைத்தியசாலை அமைப்பது என்பது ஈரான் சட்டத்திற்கு மட்டுமின்றி இஸ்லாமிய சட்டத்திற்குமே எதிரான ஒன்று" என்றார்.

பீகார்

### உயிரிழந்தவரின்

## கண்ணை காணாததால் பரபரப்பு



பீகார் மாநிலம் - பாட்னாவில் உள்ள வைத்தியசாலையொன்றில், இறந்து போன ஒருவரின் இடதுபக்க கண் காணாமல் போனமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நவம்பர் 14ஆம் திகதியன்று, பன்டூஷ் என்ற நபரை மர்ம நபர்கள் துப்பாக்கியால் சுட்டுள்ளனர். இதனையடுத்து, அவர் சிகிச்சைக்காக நாளந்தா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவருக்கு கடந்த 15ஆம் திகதியன்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. ஆனால், சிகிச்சை பலனின்றி அன்று இரவு அவர் உயிரிழந்துள்ளார்.

சனிக்கிழமை (16) அன்று அவரது உடல் பிரேதப் பரிசோதனை செய்யப்படவிருந்த நிலையில், அவரது இடது கண் காணாமல் போனதைப் பார்த்த அவரது உறவினர்கள், அவரது சடலத்துக்கு அருகில் அறுவை சிகிச்சை பிளேடு ஒன்று இருந்ததாகவும் குற்றஞ்சாட்டியுள்ளார். இந்நிலையில், உயிரிழந்தவரின் கண்ணை எலி கடித்து இருக்கலாம் என்று வைத்தியசாலை ஊழியர்கள் சந்தேகம் தெரிவித்துள்ளனர். இந்த விவகாரத்தில் வைத்தியசாலை நிர்வாகம் அலட்சியத்துடன் செயற்பட்டதாகக் கூறி, உயிரிழந்தவரின் குடும்பத்தினர் வைத்தியசாலை வளாகத்திற்குள் போராட்டம் நடத்தியுள்ளனர்.

இது தொடர்பாகப் பேசிய நாளந்தா வைத்தியசாலையின் கண்காணிப்பாளர் வைத்தியர் வினோத் குமார், "இந்த விவகாரம் தொடர்பாக விசாரிக்க 4 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. யாராவது அவர் கண்ணை வெளியே எடுத்தார்களா அல்லது எலி கண்ணைக் கடித்ததா என்ற கோணங்களில் விசாரித்து வருகிறோம்" என்றார்.

மணிப்பூர்

### மணிப்பூர் கலவர எதிரொலி:

## அரசியல்வாதிகளின் வீடுகள் தீக்கிரை



மணிப்பூரில், முதலமைச்சர் பைரன் சிங்கின் மருமகன் உள்ளிட்ட 3 எம்.எல்.ஏக்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

மணிப்பூரில் மெய்தி இன சமூகத்தினருக்கும், குகி பழங்குடியினருக்கும் இடையே கடந்த ஆண்டு மே மாதம் மோதல்கள் ஏற்பட்டன. இது வன்முறையாக மாறியதில், இரு தரப்பிலும் 240 பேர் கொல்லப்பட்டனர்.

இந்நிலையில், பல மாதங்களுக்குப் பின்னர் மணிப்பூரின் பல்வேறு பகுதிகளில் மீண்டும் கலவரம் வெடித்துள்ளது.

இதன் தொடர்ச்சியாக, முதலமைச்சர் பைரன் சிங்கின் வீட்டைக் கும்பல் ஒன்று முற்றுகையிட முயற்சித்தது. இதனால், பாதுகாப்புப் படையினர் அந்த பகுதியில் குவிக்கப்பட்டுள்ளனர். அவர்கள், ஆர்ப்பாட்டக்காரர்களை கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதுதவிர, 3 அமைச்சர்கள் மற்றும் 6 எம்.எல்.ஏக்களின் வீடுகளையும் அந்த கும்பல் தாக்கியுள்ளது.

அவர்களின் சொத்துகளையும் சூறையாடியது. இதனால், அந்த பகுதிகளில் பதற்றம் நிலவியது.

இந்த 6 எம்.எல்.ஏக்களில், பைரன் சிங்கின் மருமகன் உள்ளிட்ட 3 எம்.எல். ஏக்களின் வீடுகள் மற்றும் பிற பொருட்கள் மீது தீ வைக்கப்பட்டுள்ளது. அந்த கும்பலைக் கலைக்க பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியுள்ளனர்.



### ஐந்தாவது போட்டியில்

# இங்கிலாந்தை வென்ற மேற்கிந்தியத் தீவுகள்

இங்கிலாந்துக்கெதிரான ஐந்து போட்டிகள் கொண்ட இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரில், சென். லூசியாவில் ஞாயிற்றுக்கிழமை (17) நடைபெற்ற நான்காவது போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் வென்றது.


ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: மேற்கிந்தியத் தீவுகள்

இங்கிலாந்து: 218/5 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஜேக்கப் பெத்தெல் ஆ.இ 62 (32), பில் ஸோல்ட் 55 (35), ஜொஸ் பட்லர் 38 (23), வில் ஜக்ஸ் 25 (12), சாம் கர்ரன் 24 (13) ஓட்டங்கள்) மேற்கிந்தியத் தீவுகள்: 221/5 (19 ஓவ. ) (துடுப்பாட்டம்: எவின் லூயிஸ் 68 (31), ஷே ஹோப் 54 (24), றொவ்மன் பவல் 38 (23), ஷெர்ஃபேன் ருதஃபோர்ட் ஆ.இ 29 (17) ஓட்டங்கள். பந்துவீச்சு: சஹிப் மஹ்மூட் 0/24 [4])

போட்டியின் நாயகன்: ஷே ஹோப்

## ஓய்வு பெறும் கிறிஸ்டினாடோ ரொனால்டோ?



ஓய்வு நடைபெற வேண்டுமானால், அது ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளுக்குள் நடைபெற வேண்டுமென போர்த்துக்கல்லின் அணித்தலைவர் கிறிஸ்டியானோ ரொனால்டோ தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் தேசங்களுக்கான லீக் தொடரில் போலந்தை 5-1 என்ற கோல் கணக்கில் சனிக்கிழமை (16) போர்த்துக்கல் வென்று காலிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்ற பின்னரே இக்கருத்தை ரொனால்டோ வெளிப்படுத்தியுள்ளார்.

இப்போட்டியில் 2 கோல்களைப் பெற்ற ரொனால்டோ தனது 132ஆவது வெற்றியை போர்த்துக்கல்லுக்காக பெற்ற நிலையில், ஸ்பெய்னுக்காக 131 போட்டிகளில் வென்ற சேர்ஜியோ றாமோஸின் அதிக சர்வதேசப் போட்டிகளில் வென்ற சாதனையை முறியடித்திருந்தார்.



### இங்கிலாந்து பிறீமியர் லீக்கின்

## அதிக ஊதியம் பெறும் வீரராக ஹலாண்ட்?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் சிற்றிக்கும், அதன் முன்களவீரரான எர்லிங் ஹலான்டின் பிரநிதிகளுக்குமிடையே புதிய ஒப்பந்தமொன்று தொடர்பில் பேச்சுக்கள் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வாரமொன்றுக்கு 500,000 ஸ்டேர்லிங்க் பவுண்ஸ்கள் ஊதியத்தை கொண்ட மேம்படுத்தப்பட்ட ஒப்பந்தம் தொடர்பிலேயே பேரம்பேசல்கள் இடம்பெறுவதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை இதன்போது 24 வயதான ஹலான்டை ஒப்பந்தம் செய்வதற்கான தற்போதைய தொகையான 150 மில்லியன் ஸ்டேர்லிங்க் பவுண்ஸ்கள் என்பதை நீக்க அல்லது 200 மில்லியன் ஸ்டேர்லிங்க் பவுண்ஸ்களாக அதிகரிக்க சிற்றி விரும்புகிறது.

முன்னர் ஹலான்டைக் கைச்சாத்திட சிற்றி ஆர்வம் காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



### அவுஸ்திரேலியாவுக்கெதிரான

## முதலாவது டெஸ்டைத் தவறவிடும் கில்?

அவுஸ்திரேலியாவின் பேர்த்தில் பிடியெடுப்பொன்றை எடுக்கும்போது இடதுகை பெருவிரலில் இந்தியாவின் ஷுப்மன் கில் சனிக்கிழமை (16) காயமடைந்துள்ளார். ஆரம்பகட்ட தகவல்களின்படி, முறிவெனக் கூறப்படுகின்ற நிலையில் அவுஸ்திரேலியாவுக்கெதிரான எதிர்வரும் வெள்ளிக்கிழமை (22) ஆரம்பமாகவுள்ள முதலாவது டெஸ்டை அவர் தவறவிடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது. முதலாவது டெஸ்டில் இந்திய அணித்தலைவர் றோஹித் ஷர்மாவின் பங்கேற்பு தெளிவில்லாமலுள்ளதுடன், லோகேஷ் ராகுலுக்கும் வெள்ளிக்கிழமை (15) முழங்கையில் பந்து தாக்கியமை குறிப்பிடத்தக்கது.

இந்தியக் குழாமிலுள்ள ஆரம்பத் துடுப்பாட்டவீரரான அபிமன்யு ஈஸ்வரனும் பிரகாசிக்காத நிலையில், தற்போது இந்திய ஏ அணிக் குழாமில் இடம்பெற்றிருந்த தேவ்டுட் படிக்கல்லை அவுஸ்திரேலியாவில் தங்கியிருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் திங்கட்கிழமை, 18 நவம்பர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.